எம்.சி.ஓ.பி. எண்: 634/2016 மற்றும் 5352/2018 தேதி : 04.09.2023

ம.சா. : 1
பெயர் : திருமதி. புஷ்பராணி
க/பெ. : திரு. மணிகண்டன்
வயது : 30

<u>**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**</u>

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த விபத்து இழப்பீடு மனு எண்: 634/2016–ஐ தாக்கல் செய்து என் கணவரின் இழப்பீட்டாக இழப்பீடு கோரியுள்ளேன். என் கணவர் விபத்தில் இறந்த தேதியில் என் மாமனார், மாமியார் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். இம்மனு தாக்கல் செய்கையில் என மாமனார், மாமியாரை எதிர்மனுதாரர்கள் 3 மற்றும் 4–ஆக காண்பித்து மனு தாக்கல் செய்தேன். என் மாமனார், மாமியார் இம்மனுவில் எதிருரை தாக்கல் செய்திருந்தனர் என்றால் சரிதான், அதிலுள்ள விவரங்களை நான் படித்துப்பார்த்தேன். அந்த பதிலுரையில் நான் மணிகண்டனின் மனைவி அல்ல என்றும், என்னை திருமணம் செய்து கொள்ளாத நபராகத்தான் விபத்தில் இறந்துள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளனர் என்றால் சரிதான். இந்த விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான், அவர் இறந்தது 2015 ஆகும். எனக்கும் மணிகண்டனுக்கும் 7.10.2015–ல் திருமணம் நடந்தது. அந்த வகையில் எங்கள் திருமணம் விபத்து நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன் நடந்ததாகத்தான் குறிப்பிட்டுள்ளேன். இந்த விபத்து தொடர்பாக குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை, ஆனால் காவல் நிலையத்தில் சாட்சியம் அளித்துள்ளேன். உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 2–ல் இந்த விபத்து நடந்த விதத்தை நேரில் பார்த்தது போல் சாட்சியம் சொல்லிருப்பது தவறு என்றால் சரிதான். இந்த விபத்தானது மணிகண்டன் என்ற பாதிக்கப்பட்ட நபரின் தவறால், கவனக்குறைவால் நடந்துள்ளது என்றால் சரியல்ல. புகாரின் படி விபத்து சமயத்தில் என் கணவர் மணிகண்டன் இருசக்கரம் ஓட்டிச்சென்றிருந்தார் என்ற குறிப்பு உள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணிந்து செல்லவில்லை என்றால் சரியல்ல. திருமணத்திற்குப் பிறகு நானும், மணிகண்டனும் தனித்தனியே அவர் அவரது தாய், தந்தையாருடன் வசித்து வந்தோம் என்று சொன்னால் அது சரியல்ல. அவ்வாறு சொல்லும் சாட்சியம் தவறானது உங்கள் பிரமாண வாக்குமூலத்தையே உங்கள் திருமணம் மணிகண்டனின் தாய், தந்தையாருக்கு பிடிக்காததால் நீங்கள் இருவரும் அவர் அவர் வீட்டிற்கு சென்று விட்டதாக ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில் அதனை மாற்றி தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. மசாஆ 4–ஆக தாக்கல் செய்துள்ள ஆவணம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி நிலை நிர்க்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. யோகேஷ் என்பவரை எனக்கு தெரியும். மசாஆ 4–ஐ நிரூபிக்கும் வகையில் யோகேஷ் என்பவரையும் தாம்பரம்

அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளரையும் சாட்சிகளாக அழைத்து விசாரித்தால் தான் அதன் உண்மை நிலை தெரிய வரும் என்றால் சரியல்ல. விபத்து நடந்த கால கட்டத்தில் HBL Global Pvt. Ltd., என்ற தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வந்திருந்தார். மணிகண்டன் வேலைப்பார்த்து சம்பளம் பெற்று வந்தார் என்பதற்கு ஆதாரமாக மசாஆ 6 மற்றும் 13–ஐ தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த நிறுவனத்தில் தான் மணிகண்டன் வேலைப்பார்த்து வந்தார் என்பதை நிரூபிக்க அந்த நிறுவனத்தினரை அழைத்து விசாரிக்க தயாராக உள்ளேன். மசாஆ 6 மற்றும் 13–ஐ வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் 3 மற்றும் 4–ஆக காண்பிக்கப்பட்ட நபர்கள் தனியே ஒரு இழப்பீடு மனுவை தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும், அந்த ஓபி. எண் 5352/2018 என்ற மனுவில் நீங்கள் மனுதாரராகவோ, எதிர்மனுதாரராகவோ சேர்ந்து வழக்கு எதிர்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளீர்களா என்றால் இல்லை. காரணம், அந்த விவரம் தெரிய வந்த பிறகு அவர்கள் தாக்கல் செய்த மனுவையும், என் மனுவுடன் சேர்ந்து விசாரிக்க மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு தற்போது இரண்டு மனுக்களும் ஒன்றாகத்தான் விசாரணையில் இருந்து வருகிறது. மணிகண்டனின் தாயார், தந்தையார் தாக்கல் செய்துள்ள மனுவில் நீங்கள் மணிகண்டனின் சட்டப்படியான வாரிசு அல்ல என முடிவு செய்துள்ளதால் அந்த மனுவின் கீழ் நீங்கள் கோரும் இழப்பீடு நிலை நிர்க்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.